தொழிலாளர்கள் லாண்டரி வைத்திருந்தால் ஒரு லாண்டரிக்கு ரூ. 150 விதம் கொடுக்கப்படுகிறது. டெயிலரிங் ஷாப் வைத்து நடத்துகிறவர்களுக்கு ரூ. 400 கொடுக்கப்படுகிறது.

Burning ghats

* 169 *Q.*—**Sri P. G. MANICKAM :** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதில் அளிப்பாரா—

கோயமுத்தூர் ஜில்லா, பவானி தாலூகாவிலுள்ள ஹரிஜனக் காலனிகளில் எத்தனை காலனிகளிலுள்ள ஹரிஜனங்களுக்கு சுடுகாட்டுக்காக இடம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது ?

THE HON. SRI P. KAKKAN : Nil. Proposals are, however, under examination.

Sri P. G. MANICKAM : பவானி தாலூகாவில் ஏறக்குறைய 39 ஹரிஜன காலனிகளுக்கு சுடுகாடுகள் தேவை என்று சர்க்காருக்கும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் தெரிவிக்கப் பட்டிருக்கிறது. சமீபத்தில் நடைபெற்ற மாகாண வெல்பேர் கமிட்டிக் கூட்டத்தில் இதைப்பற்றி முடிவு செய்து சர்க்காருக்கும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கலெக்டருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறது. அவைகளின் மீது என்ன நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கிறீர்கள் என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்பற்றி மாகாண வெல்பேர் கமிட்டியின் மூலமும் சர்க் காருக்கும் கலெக்டருக்கும் அறிவிக்கப்பட்டிருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI P. KAKKAN : இதைப்பற்றி என்ன நடவடிக்கை எடுத்துக் கொள்வது என்பதைப்பற்றி பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது. இந்த மாதம் 19 கேஸ்களில் வீடுகள் கட்டுவதற்கும் மயானங்கள் அமைப்பதற்கு நிலம் வாங்கவும் ஏற்பாடு செய்யப் பட்டிருக்கிறது. அதைப்பற்றியும் பரிசீலனை செய்யப்பட்டு வருகிறது என்பதை தெரிவித்துக்கொள்ளுகிறேன். அதைத் தவிர நான்கு இடங்களில் அதாவது பெரிய வடமலைபாளையம், ஹாம்லட் ஆப் ஜெம்பை, சித்தரிப்புத்தோப்பு, தவிட்டுப்பாளையம், ஹாம்லட் ஆப் ஆண்டியூர், ராசன்குளம், ஹாம்லட் ஆப் கெட்டி சமுத்ரம் ஆக நான்கு இடங்களிலும் மயானத்திற்கு என்று இடத்தை 'அக்வயர்' செய்ய தக்க நடவடிக்கைக்கு ஏற்பாடு செய்யப்பட்டு வருகிறது.

SRI N. MARUDACHALAM : ஹரிஜனங்களுக்கு என்று தனியாக மயானம் இருப்பதைக் காட்டிலும் ஜாதி ஹிந்துக் களுக்கு என்று இருக்கக்கூடிய மயானத்திலேயே ஹரிஜன பிணங் களையும் புதைக்க சர்க்கார் தக்க ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI P. KAKKAN : இப்பொழுது சர்க்கார் எப்படி உத்தரவிட்டிருக்கிறார்கள் என்றால், ஏற்கனவே ஒரு மயானம் பொதுப் பணத்திலிருந்து ஒதுக்கி அது மக்களுக்குப் பயன்படு மானால் அந்த இடத்தில் ஹரிஜனங்களுக்கு எந்த விதமான

இடையூறும் இருக்கக்கூடாது. அங்கு ஹரிஜனங்கள் பிணத்தைக் கொண்டுபோனால் அங்கே அனுமதிக்கப்பட வேண்டும். அப்படி யாராவது ஒத்துக்கொள்ள மாட்டேன் என்று சொன்னால் அவர்கள் வேறு இடத்தைத் தேடிக் கொள்ளவேண்டும். மற்ற எந்த விதத்திலும் ஹரிஜனங்களுக்கு இடையூறு இருக்கக்கூடாது என்று சொல்லப்பட்டிருக்கிறது. தவிர, ஜாதி ஹிந்துக்கள் சகோதரர்கள் தனியாக மயானத்திற்கு இடம் வேண்டும் என்று கேட்டால்கூட அதை அரசாங்கம் ஒத்துக்கொள்ளாது. ஹரிஜனங்களுக்கு என்று தனியாக ஒதுக்கப்பட்ட இடங்களில் ஜாதி ஹிந்துக்கள் தங்களுடைய பிணங்களைப் புதைக்கிறோம் என்று முன் வந்தால் அவர்களுக்கும் அனுமதி அளிக்கப்படுகிறது.

Irrigation Projects

* 173 Q.—**SRI P. G. MANICKAM:** கனம் பொது மராமத்து அமைச்சர் அவர்கள் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்கு பதிலளிப்பாரா—

(அ) ஒவ்வொரு ஜில்லாவிலும் எந்தெந்த நீர்ப்பாசன திட்டங்களை மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க உத்தேசம்?

(ஆ) ஒவ்வொரு நீர்ப்பாசன திட்டத்துக்கும் எவ்வளவு தொகை தேவையென்று மதிப்பிடப்பட்டிருக்கிறது?

THE HON. SRI P. KAKKAN: (*a*) and (*b*) A statement[a] containing the required information is placed on the table of the House.

SRI A. VEDARATHNAM: மேஜையின்மீது வைக்கப்பட்டுள்ள எட்டில் தஞ்சை ஜில்லாவைப்பற்றிக் குறிப்பிடும்போது "மாடர்னைசிங் எக்சிஸ்டிங் சானல்" என்ற இனத்தின்கீழ் தஞ்சை ஜில்லாவிற்கு என்று 100 லட்சம் ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கிறது. அது என்ன முறையில்? இந்த புது முறையாக கால்வாய் அமைக்கப்பட்டிருக்கிறதே அதற்காகவா? இன்னும் கடலோரப் பகுதிகளில் கடலில் வீணாகப் போகிற தண்ணீரைப் பாசன வசதிக்குப் பயன்படுத்த வேண்டும் என்று ஏராளமான கோரிக்கைகள் வந்து கொண்டிருக்கின்றனவே, அந்த ஜாப்தா இதில் குறிப்பிடப்படவில்லையே ஏன் என்பதைத் தயவுசெய்து விளக்குவார்களா?

THE HON. SRI P. KAKKAN: கனம் அங்கத்தினர் கேட்டுள்ள முதல் கேள்வி மூன்றாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் நீர்ப்பாசனத் திட்டங்களை எடுத்துக்கொள்ள அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது. குறிப்பாக அதற்காக ஏற்கனவே தஞ்சை ஜில்லாவில் இருக்கிற வாய்க்கால்களை நல்ல முறையில் செப்பனிட வேண்டும் என்பதற்காக அங்கேயெல்லாம் வாய்க்கால்களில் சிமெண்ட் லைனிங் செய்து தண்ணீரை வீணாக்காமல் கடலோரங்களுக்குச் செலுத்துவதற்கு ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. அதற்கு வேண்டிய திட்டமிட்டிருக்கிறார்கள்.

---

[a] Printed as Appendix on page 83 infra.